முருகப்பெருமான் துணை

**மகான் கோச்செங்கட்சோழ நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**03.05.2021**, திங்கட்கிழமை

1. மக்களை ஞான வழி நடத்த
மாதவசியாக வந்த அரங்கனே
தேக்கமின்றி உன் தரும நெறி
தேசமெங்கும் பரவிட இனிதே
2. இனிதே உலகம் பாதுகாப்பு பெறுமென
இயம்பியே யோகபிரசன்ன ஆசி
கனிவுபட பிலவ தகரின் திங்கள்
கண்டுரைக்க இருபான்திகதி சோமவாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 20ம் நாள், 03.05.2021 திங்கட்கிழமை)
3. வாரமதில் கோச்செங்கட்சோழநாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
அறமெனும் ஞான சக்தி
அரங்கன் ஆசிபட உலகை வலம்வர
4. வருகவே ஆறுமுகக் கடவுள்
வரமாக எண்ணி உலகோர்
தருமமதை ஏற்றுத் தொடர
தவராசன் சன்மார்க்க கொள்கை
5. கொள்கை ஏற்று வருக
குவலயம் பாதுகாப்பு பெறும்
ஆளுமைகள் ஞான பலமாகி
அகிலமே அமைதிதனை காணும்
6. காணவே அரங்கஞானி வாழ்
கருணைமிக்க ஞானக்குடிலை
ஞானம்வேண்டி உலகோர் வந்து
ஞானதேசிகன் திருவடி பணிந்து
7. பணிந்து ஆசி தீட்சைதனை
பழுதில்லா அடைந்து நன்கு
துணிந்து மக்கள் தொண்டில்
தொண்டர்களாகி இணைந்து வர
8. வருகவே மக்களிடை தேற்றம்
வள்ளல் தன்மையாக மாறி
தரும பலம் எங்கும் பெருகி
தனித்துவம் உலகம் அடையும்
9. அடையவே அரங்கமகான் வழி
அனைத்து ஞானிகளும் இறங்கி
இடர்கள் அனைத்தையும் வென்றிடும்
இயற்கை சக்திகளாக மாறி

10. மாறியே உலகம் தன்னில்
மழைவளம் நிலவளம் கூடி
தேறிடும் பிறதொழில் வளமும்
தெய்வ பலமாக குருவருள் துணைவர

11. துணைவர கலியுக மக்கள்
திருவருளாக ஞான ஆட்சிபெற்று
இணையிலா ஏற்றம் காண்பர்
இயம்பிய யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—